74

சுசத்தகிதம்

7 OCT

BY

E. M. RAMAKRISHNAN.

Al[illegible]served.] 1931 [Madras.

92:417
N31
120635

சுசத்தகிதம்

7 OCT

இஃது

இ. மா. இராமகிருஷ்ணன்

இயற்றியது

காபிரைட் ரிஜிஸ்டர்ட்]   1931   [சென்னை.

1881
784.0954

170635

சத்தமே நம

இராகம்: பைரவி — ஆதி: தாளம்.

பல்லவி.

திருவெழு தூய மாதரே திருசத்ததேசோமயமே
தீருமெம் தீவினையை

அநுபல்லவி.

திருவுளச் சம்மதமாகித் திருக்கண்ணைக் கொண்டு கண்டு
திருமுகம் படைத்திங்கு திருச்சத்தாவதாரங் கொண்டு

சரணங்கள்.

திரு யிமயவாசரே திருமலர் முகரே யும்
திரு மனங்கசிந்துத் திருப்பதந் தருவீரோ
திருவேயும் வருகையின் திருநாளை யென்றும் நினைந்
திருகை கூப்பியேராம கிருட்டிணன் தொழுதிருக்க

இராகம்: உமாபரணம் — ஆதி: தாளம்.

பல்லவி.

சிவமாய் நிற்குமயமே சத்த கன்னியோரே
சிவரே நீரன்றி சாமிவேறேதெமக்கு

அநுபல்லவி.

பவவினையே யென்றுங் கவசங் கொண்டாட்டிய
பாவிக்குமிப் பாரினிலே காட்சிதந்து கதியீவீர்

சரணம்.

அல்லும் பகலுமும் அருந்தாளை யடுப்பது
அகிலலோகப் பொருளே அறியீரோ யின்றும்
அதகதம் நீக்குமெம் ஆதவப்பொருளே
ஆதரியுமி ராமகிருஷ்ணன் ஆய்ந்து தோத்திரஞ்செய்ய

இராகம் : பூர்வகல்யாணி — ரூபகம் : தாளம்.

பல்லவி.

மாதரெழு வோரே யின்றும்
மாந்தர் தொழு வோமே யென்றும்

அநுபல்லவி.

பாதமகலும் மா நிலயே பாரகத்தின் வொளியே
பாவகாரி தாவநிற்க பாரம் நீக்குங் கிருபையே
பாரகப் பரம் பொருளே நீர்
பக்தமாந்தர்க்ககமே நீர்
சேவிக்க மோட்சத்தையே நீர்
ஸ்ரீ மதங்கியரே தருவீர்

சரணங்கள்.

விகிதமாகசிவ விதிக்கும் நீர் விமலரையே விதியீர்
இரவியையும் வியக்குவீர் இரட்சணையுஞ் செய்வீர்
சமகுண ஜன சகோதரி சத்தமேகம் புகுஞ் சோதரி
சமர விசய சுக சோதரி சாது மகா சத்த சோதரி
சகல லோக சத்த சோதரி தனிநிலயெனுஞ் சத்த சுந்தரி
சுகஞ்சீரே ! நிலங்கோரி தனி ராம கிருஷ்ணனுங் கோரி

இராகம் : அஸாவேரி — ஆதி : தாளம்.

பல்லவி.

எது கதி யெனக்கு மாதரெழுவரே

அநுபல்லவி.

இதுவுமது நல் வரவிற் சமயமே
மாதரெழுவரே வந்து நீர் சொல்லுமே

சரணம்.

இதுவும் அதுவும் எதுவும் நீரே
எதுவும் அறியா எனக்கருள்வீரே
சாது சத்த மகா கன்னியோரே
பேதுயிராம கிருட்டிணன் பேணினேன்

600 008

இராகம் : நாதநாமகிரியை — ரூபகம் : தாளம்.

170635

பல்லவி.

எழுமாதரைத் தொழுது நோக்க வுலகமும்
போற்ற வாரீர்

அநுபல்லவி.

தொழுகுட்டருக்குந் தோன்றித்தம்மைத்
தொழுது தொடருந் தாதராக்கும்

Q2:41
N5

சரணங்கள்.

அறிவை யிழந்து திரிந்தோம் அருவெழுவரை மறந்தோம்
அறிவை யழிக்கும் நோயைவென்று ஆவலுடனே நாடிச்
சென்று

மதம் பிடித்தென்றுமிருந்தோம் மதியையும் பறிகொடுத்
தோம்
பதம் பெறுதலை நாடிநின்று பதறிவிரதங் கொண்டுசென்று

மானிடசன்ம மெடுத்தோம் மந்தை மந்தையாக நடித்தோம்
தேனும் பாலும் போலகூடி தேற்றங் கொண்டத் தலத்தைத்
தேடி

கண்ணில்லார்க்குங் கண்ணையளிக்கும் கன்னியரவ்வெழு
வரரே விளிக்கும்
மண்ணிலாசை மூன்றைவென்று மனதிற்கினியவ் வாம்பிற்
சென்று

நாதநாமகிரியையிலும் நாடியினிய (வு) ரூபகத்திலும்
கித்மிராம கிருட்டிணன் சொல்ல நீலநமனின் வதையை
வெல்ல

இராகம்: **கதனகுதூகலம்** — **ஆதி**: தாளம்.

பல்லவி.

திகழ் வமிசமதில் புகழ்பூண்ட ஸ்ரீ
திகழ் மாதரெழு புலந்தேவியரே

அநுபல்லவி.

நிகழ் பூவினை யறிவோரே யெம்
நிகழ் பாவமறவே நீக்கி நிழல்தாரும்

சரணம்.

திகழ் வனமதில் தெள்ளெழுசுராநீர்
இகழ்வோர் தொழ அகழ் நீக்கும் நீர்
நிகழ் தீவினை நிகழாமலே
இகழ்வீரி ராம கிருஷ்ணன் புகழவே

இராகம்: **பியாகடை** — **ஆதி**: தாளம்.

பல்லவி.

பரமானந்தத் திசை சத்த தேவி
பரமானந்தந் தருவீரே தேவி

அநுபல்லவி.

சரமாரி செய்து சரணஞ் செய்வோம்
பரதேசி யெம்மைப் பிரியாக்கியே

சரணம்.

சுருதிலயங்	கருவியிற் பூட்டி
வருதி மயங்	தரணியிற் காட்டி
வருக நீரிங்குச்	சிரேட்டமாகவே
வருக ராம	கிருஷ்ணன் புகழவே.

காபிரைட் (இப்புத்தகச் சுதந்தரம்) ரிஜிஸ்தர் செய்யப்-
பட்டுள்ளது.

மங்களம்.

இராகம் : சௌராஷ்டிரம் — ஆதி : தாளம்.

பல்லவி.

நீங்கா சத்த மாதருமக்கு நித்திய ஜய மங்களம்

அநுபல்லவி.

பாங்கான வுமது பாதம் பாரெங்கும் பாதுகாக்க

சரணம்.

சத்தசுரப் பிறந்தையாகிச் சத்தமாய் நீரெங்கும் நிறைய
சத்ததீர்த்தப் பிறந்தையாகிச் சத்தமேகமென நீர் நிற்க
சுத்தாக்கினிப் பிறந்தையாகிச் சத்தவொளியென நீர் நிற்க
சுத்தாற்புத விண்ணேயாகிச் சித்திக்கெட்டா வண்ணம் நிற்க

சுகந்தஞ் செய்தேன் ராஜீஸ்வரி சுசத்தோரே வருக!
வருகவே!!

—இராமகிருஷ்ணன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

-600 008.
120635

PRINTED AT
THE CHANDLER PRESS.
PURASAWALKAM.
MADRAS.